பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 26 சனிக்கிழமை (12-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 238

# கொழும்பு நகரை பாதுகாக்க விசேட படை திரட்டப்படும்!

## இளைப்பாறிய இராணுவத்தினர் சேர்க்கப்படுவர்

கொழும்பு, ஒக்ரோபர் 12

**கொழும்பு நகரையும் அதைச் சூழவுள்ள பிரதேசங்களையும் பாதுகாப்பதற்காக புதிதாகப் படை ஒன்றைத் திரட்டி மூன்று பிரிகேட்டுகளை அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது.**

படைகளிலிருந்து ஓய்வு பெற்று விலகிச் சென்றிருப்போரை விசேட திட்டத்தின் கீழ் கொழும்பில் சேவையாற்றுவதற்கென ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்து புதிய பிரிகேட்டுகளை உருவாக்கவும்—

இந்த பிரிகேட்டுகளை நகரில் சேவையில் அமர்த்தியதும் தற்போது கொழும்பில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கும் முப்படையினரையும் பொலிஸாரையும் யுத்த முனைகளுக்கு அனுப்பவும்—

பாதுகாப்பு உயர்பீடங்கள் முடிவு செய்திருப்பதாக அறியவருகின்றது.

படையில் சேருமாறு அரசு விடுக்கும் அழைப்பை, யுத்த முனைக்குச் செல்ல வேண்டிவரலாம் என்ற அச்சம் காரணமாக, இளைஞர்களும் ஓய்வுபெற்ற படையினரும் ஏற்காமல் நிராகரித்து வருவது தெரிந்ததே.

கொழும்பில் மட்டும் பணிபுரிவதற்கு என்று அழைத்தால் அதனை ஏற்றுப் பணிபுரிய ஓய்வு பெற்ற படையினர் வருவார்கள் என்று அரசு எதிர்பார்க்கின்றது.

இதற்கமைய ஒவ்வொன்றும் 840 படையினரைக் கொண்ட மூன்று பிரிகேட்டுகளை புதிதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவர்கள் இவ்வருட இறுதிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## போலியோ 2 ஆம் கட்டம் சொட்டு மருந்து

யாழ்ப்பாணம் ஒக் 12

சர்வதேச றோட்டறிக்கழகத்தின் ஏற்பாட்டில் யுனிசெ மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து போலியோ தடுப்பு மருந்து வழங்கும் இரண்டாம் கட்ட நாள் இன்றாகும்.

யாழ். மாவட்டத்தில் 6 சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைப் பிரிவுகளிலும் அமைக்கப்பட்டுள்ள 103 நிலையங்களிற் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை சொட்டு மருந்து வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் 10 ஆயிரம் நிலையங்களில் இப் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

பெற்றோர் 5 வயதுக்குக் குறைந்த எல்லாப் பிள்ளைகளையும் இந்த நிலையங்களுக்கு அழைத்துவர வேண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னணிக் காவலரண்களிலிருந்து படையினர் வடக்கே முன்னேற முயற்சி

கொழும்பு, ஒக். 12

வவுனியா, அநுராதபுரம் மாவட்டங்களில் உள்ள தமது முன்னணிக் காவலரண்களை வடபகுதி நோக்கி நகர்த்தும் இராணுவ நடவடிக்கை ஒன்றை கடந்த புதன்கிழமையன்று படையினரும் பொலீசாரும் கூட்டாக ஆரம்பித்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள படையினர் குடாக்கச்சிகொடிய பகுதியிலிருந்து சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரம் முன்னேறி கெப்பிட்டிவெவ பகுதியில் தற்போது நிலைகொண்டுள்ளனர் என்றும்—

அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து கெப்பிட்டிக்கொலாவ, பதவியா ஆகிய பகுதிகளில் இருந்து படையினர் வடக்கு நோக்கி முன்னேறுகின்றனர் என்றும்—

கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு நோக்கி மேலும் முன்னேறி புதிய முன்னணிக் காவலரண்களை அமைப்பதே படையினரின் நோக்கம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(மற்றும் ஒரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

(உ-150)

# ஜெயலலிதா கைதாவார்?



சென்னை, ஒக். 12

ஜெயலலிதாவின் முன் பிணை அனுமதி தொடர்பான முக்கிய இரண்டு மனுக்களை நீதிமன்றம் நேற்று நிராகரித்ததை அடுத்து அவர் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்ற பேச்சு சென்னை வட்டாரங்களில் அடிபடத் தொடங்கியுள்ளது.

மத்திய, மாநில புலனாய்வுப் பிரிவுகள் தமக்கு எதிராக நடத்தி வரும் விசாரணைகள் மற்றும் பதிவு செய்துள்ள பல்வேறு வழக்குகள் ஆகியவை தொடர்பாக — ஒட்டு மொத்தமாக — முன்பிணை அனுமதி வழங்குமாறு கோரி ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவை சென்னை மேல் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையர்களை சட்டவிரோதமாக வெளிநாடுகளில் குடியேற்றும் குழு

## பிரான்ஸில் 17 பேர் கைது

கொழும்பு, ஒக். 12

கொழும்பில் இருந்து கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இலங்கையர்களை சட்டவிரோதமான முறையில் அனுப்பி அவர்களை ஆங்காங்கே குடியமர்த்தும் கைங்கரியத்தை கடந்த 8 வருடங்களாக நிகழ்த்தி வந்த குழு ஒன்றை பிரான்ஸ் கண்டுபிடித்து அவர்களை வெளியேற்றியுள்ளதாக பிரான்ஸ் உள்விவகார அமைச்சர் தெரிவித்தார்.

ஒவ்வொரு நபரிடமிருந்தும் சுமார் எண்ணூறு டொலரை அறவிட்ட பின்னர் அவர்களை உக்ரைன், தலைநகர் கீவ் மற்றும் போலந்து, சுவிஸ், ஜேர்மன் ஆகிய நாடுகள் மூலம் பிரான்ஸுக்குள் தள்ளிவிடும் நடவடிக்கையில் இக்குழுவினர் ஈடுபட்டிருந்தனராம்.

இக் குழுவின் 11 தலைவர்கள் உட்பட 17 பேர் தம்மிடம் சிக்கியதாக பிரான்ஸ் அறிவித்தது. (உ-3-150)

# படை உயரதிகாரிகளை குறிவைக்கும் பெண் புலிகள்

## புலனாய்வுத் துறையினர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 12

யுத்தத்தில் உயிரிழக்கும் படையினரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றச் செல்லும் படை உயரதிகாரிகளை இறுதிக்கிரியைகளின் போது இலக்கு வைத்துத் தாக்க தற்கொலைப் படையினரைப் புலிகள் அனுப்பியிருக்கின்றனராம்.

இதுபற்றிய தகவல்கள் கிடைத்திருப்பதால் படையினரின் இறுதிக்கிரியைகளுக்குச் செல்லும் உயரதிகாரிகளை அவதானமாக இருக்கும்படி புலனாய்வு வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டது.

அநேகமாக பெண்களும்புலிகளே இத்தகைய தாக்குதல்களைச் செய்வார்கள் என்றும் எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டதாம். (உ-150)

## நோபல் பரிசு

ஒஸ்லோ, ஒக் 12

1996 ஆம் ஆண்டில் சமாதானத்துக்கான நோபல் பரிசு இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவிலுள்ள ரோமன் கத்தோலிக்க ஆயர் காலோஸ் பிலிப்பே பெலோவுக்கும் —

கிழக்குத் திமோர் சுதந்திர இயக்கத்தின் தாப்பில் பேச வல்ல அதிகாரியான கொசே ராமோஸ் ஹோட்டாவுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

# கொள்ளையருடனான மோதலில் 2 பொலீஸ் பலி

## ரூ. 9 லட்சம் அபகரிப்பு

கொழும்பு, ஒக். 12

மாகோவில் உள்ள ஆடைத் தொழிற்சாலைச் சம்பளப் பணம் ரூ. 9 லட்சம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கொள்ளையருடன் இடம் பெற்ற துப்பாக்கிச்சண்டையில் இரு பொலீஸாரும், பாதுகாப்பு உத்தியோகத்தரும் கொல்லப்பட்டனர். (இ-3)

# 16 ஈழ அகதிகள் கைது!

கொழும்பு, ஒக். 12

மன்னார், வங்காலையில் இருந்து படகில் தமிழகம் புறப்பட்ட 16 பேரை கடற்படையினர் கச்சதீவுக்கு அருகில் வைத்துக் கைது செய்ததாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இவர்கள் மன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

# வழமை நிலைக்கு திருமலை திரும்புகிறது

## நகரில் பதற்றம் தணிவு

திருகோணமலை, ஒக். 12

திருகோணமலையில் இரு தினங்கள் நிலவிய பதற்றம் தணிந்து தற்போது அங்கு வழமை நிலை திரும்பிக் கொண்டிருக்கிறது.

இராணுவமும் பொலீஸாரும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியில் டீசல்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனவு நிலையத்துக்கு டீசல் வந்துள்ளது. ஏற்கனவே அனுமதிபெற்ற வாகனங்களுக்கு நேற்று முதல் டீசல் வழங்கப்பட்டு வருகின்றது. (இ-117)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் அ. அஜந்தன்

சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த அருச்சுணன் விக்கினேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அஜந்தன் (அஜன்) தனது முதலாவது பிறந்தநாளை தமது இல்லத்தில் இன்று (12-10-1996) வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அம்மா, அப்பா, அப்பம்மா, சின்ன அத்தை, சின்ன மாமா, பிள்ளைகள், சித்தி, சித்தப்பா, பிள்ளைகள் மற்றும் யாழ். ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த பெரிய அத்தை, பெரியமாமா, மச்சாள்மார் குடும்பத்தினரும், யாழ் இராமநாதன் வீதியைச் சேர்ந்த பெரியமாமா, மாமி, பிள்ளைகள் குடும்பத்தினர், அடுத்து கலைநகர், அளவெட்டியைச் சேர்ந்த அம்மம்மா, அத்தைமார், மாமாமார், சித்திமார், அருமை மாமா, அத்தை மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் பெற்று நீடூழி காலம் பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றார்கள்.

(சி/3276)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### பதவி வெற்றிடம்

முழுநேர உப விடுதித்தலைவர் பதவிக்கான (ஆணும் பெண்ணும்) விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1996 - 10 - 31 வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 4,160 - 10 x 100 - 5,160/- மாதமொன்றுக்கு

தகைமைகள் :

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி.
விடுதிகளை நிர்வகிப்பதிலும் மூகாமை செய்வதிலும் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது:

45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:

தேர்வு மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும்.

குறிப்பு:

யாழ்ப்பாணம், மருதனார்மடம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள விடுதிகளிலொன்றில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி வசித்தல் வேண்டும். ஆனால் வதிவு மண்டபத்தில் குடும்பத்துடன் வசிக்கமுடியாது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி மீளளிக்கப்படும் பிணை வைப்பாக ரூபா 5,000/- ஐ செலுத்துதல் வேண்டும். இத்தொகை அவரின் சம்பளத்திலிருந்து 10 மாதாந்த தவணைப்பணங்களில் அறவிடப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் நவீன சந்தைக்கிளையில் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறாப்பரின் கரும பீடத்தில் 20 ரூபாவைச் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23x10 ச. மீ அளவுடைய சுய முகவரியிடப்பட்டதும் ரூபா 2/- பெறுமதியான முத்திரையொட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றில் உள்ளோர் தமது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத்தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவற்ற விவரங்கள் தரப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

– பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1996 - 10 - 03

(சி-3275)

## நல்லூர் பிரதேச ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 12

நல்லூர் பிரதேசத்தில் நிரந்தரமாக வதியும் ஓய்வூதியர்களின் ஒக்டோபர் மாத வவுச்சர்கள் நேற்று தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்தார்.

நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், அரியாலை, யாழ்ப்பாணம் ஆகிய கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்கள் அந்த அந்தக் கிராமிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர்கூறினார். (இ-3)

## கிளிநொச்சி மாவட்டத்தில் தொற்று நோய்

கொழும்பு, ஒக். 12

கிளிநொச்சி மாவட்டத்தில் சுத்தமான குடிதண்ணீர் இல்லாத காரணத்தால் தொற்று நோய்கள் பரவிவருகின்றன.

நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கண்மாரி என்பவற்றுடன் மலேரியா, மூளை மலேரியா போன்ற நோய்களும் பெருமளவில் பரவியுள்ளன.

இவற்றினைத் தடுப்பதற்கு அவசியமான சுத்தமான குடிதண்ணீர் மற்றும் வைத்திய சுகாதார வசதிகள், தொற்று நோயைத் தடுப்பதற்கு அவசியமான வசதிகள், ஆளணி ஏற்பாடுகள் ஆகியன இல்லை என அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (இ-3)

## பொதுசன மாதாந்த உதவிப் பணம்

யாழ்ப்பாணம், ஒக். 12

தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை, வேலணை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்து, யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் தற்காலிகமாக வதியும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுப் பட்டியல்கள் யாழ் பிரதம தபாலகத்துக்கு கிடைத்துள்ளன.

கொடுப்பனவைப் பெற உரித்துடையோர் யாழ் பிரதம தபாலகத்தில் கொடுப்பனவைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### பட்டப்பின் கல்வித்தகைமை நெறி (பகுதி நேரம்/ முழுநேரம்) 1994/95 கல்வியாண்டு

மேற்படி நெறிக்கான விரிவுரைகள் கீழ்க் காணுமாறு ஆரம்பிக்கும்.

முழுநேரம்:
**18 – 11 – 1996**
முற்பகல் 10-00 மணி

பகுதிநேரம்:
(பகுதி I / II)
**23 – 11 – 1996**
முற்பகல் 10-00 மணி

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
11-10-1996

(சி/3277)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மங்கையர்க்கரசி சபாபதிப்பிள்ளை

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி சபாபதிப்பிள்ளை (மங்கை அக்கா) 10-10-96 வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் திரு. சபாபதிப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள ஓவசியர்) அன்பு மனைவியும், தவயோகேஸ்வரி (ஜேர்மனி) தவஞானேஸ்வரி (கொழும்பு மக்கள் வங்கி), காலஞ்சென்ற தவச்செல்வன், விக்னேஸ்வரி, திலகரஞ்சினி (பாலர் பாடசாலை ஆசிரியர் வலிமேற்கு பிரதேசசபை), புவனேஸ்வரசுந்தரம் (ஜேர்மனி), பராசக்தி, ஞானேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு திசவீரசிங்கம் (ஜேர்மனி), குகேந்திரராஜா (லண்டன்), சிவரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், தரணிகரனின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ் சென்ற சண்முகதாஸின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (நேற்று) 11-10-96 பிற்பகல் 1.00 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. மா. சபாபதிப்பிள்ளை (கணவர்)
திலகரஞ்சினி (மகள்)

ஆலோலை லேன்,
வட்டுக்கோட்டை.

(43143)

### திருமதி பூமணி வைத்திலிங்கம்

சாவகச்சேரி சிவன்கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட பூமணி வைத்திலிங்கம் 11-10-96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி (ஓமந்தை), பரஞ்சோதி (அம்பாள் களஞ்சியம், சாவகச்சேரி) கமலாம்பிகை, நாகேஸ்வரி, சிவராசா, (சிவா றேடிங்கோ, சாவகச்சேரி) சிவபாலன் (லண்டன்), சிவகுமாரன் (சுவிஸ்), சிவஞானதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், வேலுப்பிள்ளை (வேலவன் ஸ்ரோர் ஓமந்தை) லோகேஸ்வரி, அருட்சோதி (சோதி தேநீர்ச்சாலை, சாவகச்சேரி), மல்லிகா (ஆசிரியர், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம்) தம்பையா, (சிவன் ஸ்ரோர், சாவகச்சேரி) ஆகியோரின் மாமியாரும், றயனி, றாஜி, ரூபி, உமா, சுபிதா, கிருஸ்ணதாஸ், நவீனன், விஜிதா, துஜிதா, பாமினி, அருட்குமார், அஜந்தா, அஜந், கிஜிதன், கயந்தினி, வினோ, சர்மினி, ஜெனார்த், நிறோயினி, சஞ்சியா, கயானா, சஜீவன், கீர்த்தனா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கபிலன், பிரசாந்தன், பார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் (ஓமந்தை) தங்கையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
வை. பரஞ்சோதி (மகன்)

சிவன்கோயிலடி,
சாவகச்சேரி.

(43153)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தர்மலிங்கம் வீரசிங்கம்

(ஆசிரியர் யா/சண்டிலிப்பாய் இந்துமகா வித்தியாலயம்)

விடுவிடென நடைபயின்றே
வீறுடனே சென்றிடுவீர்!
விதவிதமாய் கற்பித்து
விந்தையாய் உயர்த்திடுவீர்!
விளையாட்டுப் போட்டியெனில்
வீரமுடன் செயற்படுவீர் - எம்மை விட்டு
வியனுலகம் சென்றீரோ வீரசிங்க!
நயமுடனே உமையினி நாம் காண்பதெப்போ?
உம் நினைவு எம் நெஞ்சில் நிழலாட
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/ சண்டிலிப்பாய்இந்து மகா வித்தியாலயம்,
சண்டிலிப்பாய்.

(43152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனை முகாம் நடவடிக்கைகளை இயன்ற அளவு இலகுவாக்கவேண்டும்

## வவுனியா நிலைமையை பார்வையிட்டபின் நீலன் கருத்து

கொழும்பு, ஒக். 12

''இடம்பெயர்ந்த மக்கள் தாம் எதிர்நோக்கும் சொல்லொணாக் கஷ்டங்களாலும், துன்பங்களினாலும் விரக்தியும், வேதனையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சிறுவர்கள் சீரழிந்து போனவர்களாகக் காணப்படுகிறார்கள். வயதானவர்களோ தமது சோக அனுபவங்களைப் பற்றிக் கூறும்போது, துக்கம் தாங்காது, வெளிப்படையாகவே விம்மி அழுகிறார்கள். உள்ளூர் அதிகாரிகள் உதவிகள் பலவற்றைச் செய்தபோதும் அவை போதுமானவையாக இல்லை.''

கலாநிதி நீலன் திருச்செல்வம், வவுனியா நகரில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு வேப்பங்குளம், தாண்டிக்குளம், கல்விக்கல்லூரி அகதிமுகாம்களுக்கும் விஜயம் செய்த பின்பு தனது கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

தாண்டிக்குளத்தில் சோதனைகளின் போது மக்களின் கஷ்டங்களைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தாண்டிக்குளம் முகாமில், மக்கள் தொடர்புகளில் பெரும்பிரச்சினை உள்ளது. அங்கு பெரும்பாலானவர்கள் தமிழ் தெரியாதவர்களாக இருப்பதால், அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் அநாவசிய தாமதங்கள் ஏற்படுகின்றன.

மக்கள் பல்வேறு முகாம்களிலும் மீண்டும் மீண்டும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இந்த நடவடிக்கைகளும் எளிமைப்படுத்தப்படவேண்டும்.

நீர், சுகாதாரம், பொழுதுபோக்கு போன்ற வசதிகள் மிகவும் மோசமாக உள்ளன. பிள்ளைகளின் தேவைகள் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். பெண்கள் மற்றும் சிறுமிகளின் பிரத்தியேக வசதிகள் போதுமானவையாக இல்லை.

யாழ்ப்பாணத்துக்குப் பிரயாணம் செய்ய விரும்புபவர்கள் போக்குவரத்துக் கஷ்டங்களுக்கும், தடைகளுக்கும் ஆளாகி வருகின்றனர், வவுனியாவில் தமது உறவினர்களுடன் சேர்ந்து அங்கு வாழ விரும்புகின்றவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதில்லை.

அவர்களுக்கு ஒருவார பாஸ் தான் வழங்கப்படுகிறது.

விசேட தேவைகளுடன் இருப்பவர்கள் போதுமான அளவில் கவனிக்கப்படுவதில்லை. முகாமில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் பிரயாணம் செய்வதற்கு ''பாஸ்'' பெறுவதில் கஷ்டமடைகிறார்கள்.

இடம் பெயர்ந்த மக்கள் குறித்து காட்டப்பட்டு வரும் பாரபட்சங்கள் தொடர்பாக பரவலாக அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது. மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு வந்து, அரசியல் தீர்வை முன்னெடுப்பது அவசியம்.

அதை தாமதமின்றி செய்ய வேண்டும். அதே போன்று அரசியல் சட்ட சீர்திருத்த நடவடிக்கை எதிரணியின் ஆதரவைப் பெறக் கூடியதாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான கலாநிதி நீலன் திருச்செல்வம் குறிப்பிட்டார்.

(இ)

## வன்னித் தபாலகங்களில் வெற்றிடம் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 11

வன்னி மாவட்டத்தில் தபால் திணைக்களத்தில் நிலவும் 87 வெற்றிடங்களை நிரப்ப அங்கு விண்ணப்பங்கள் கோரப்படவிருகின்றன.

வட பிராந்தியத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் 125 வெற்றிடங்கள் உள்ளன.

இவற்றில் யாழ். மாவட்டத்தில் உள்ள 38 வெற்றிடங்களுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, விரைவில் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்படவிருக்கின்றன.

இதே போன்று வன்னி மாவட்டத்தில் விண்ணப்பங்களை கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## மட்டக்களப்பில் மாணவர் வகுப்பு பகிஷ்கரிப்பு

### எம். பி. யின் கொடும்பாவி எரிப்பு

கொழும்பு ஒக். 1

மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் வகுப்புக்களை பகிஷ்கரித்தனர். அத்துடன் அப்பகுதி எம். பி ஒருவரின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டமும் செய்தனர்.

அப்பாடசாலையின் கேட்போர் கூடம், பல எம். பிக்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி மூலம் கட்டப்பட்டு விரைவில் திறக்கப்பட இருக்கிறது.

ஆனால் இக்கேட்போர் கூடம் ஒரு குறிப்பிட்ட எம் பியின் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டதாக நினைவுக் கல் நிறுவப்பட்டதை ஆட்சேபித்தே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

அரசினர்

பொது (போதனா) வைத்தியசாலை

யாழ்ப்பாணம்

கேள்வி விளம்பரம்

சலவை ஒப்பந்தம் - 1997

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் அழுக்குத் துணிகளை 01 - 01 - 1997 தொடக்கம் 31 - 12 – 1997 வரை சலவை செய்வதற்கான ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 25–10-1996 காலை 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமான ரூ. 150/- ஐ வைத்தியசாலைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் இக்காரியாலயத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் நேரடியாகச் சேர்க்கப்படலாம். அல்லது ஒப்பந்தகாரர் விரும்பினால் கேள்விப் பத்திரங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம்.

கேள்விப் பத்திரங்களை அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12–00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் என்னால் வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவுத் திகதியன்று காலை 10-00 மணிக்குப் பின்னர் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர் பிணைப் பணமாக ரூபா 1500/- ஐச் செலுத்தி ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 25-10-1996 காலை 10-00 மணிக்கு எமது காரியாலயத்தில் திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்கலாம்.

மேலதிக விவரங்கள் இவ்வைத்தியசாலைக் கணக்காளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
(செல்வி) நவமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

10–10–1996 (சி/3207)

## சமய அறிவுப் போட்டி நாளை

கொழும்புத்துறை, ஒக் 12

யாழ். மாநகரசபை சைவ சமய விவகாரக் குழு வருடாந்தம் நடத்தும் சமய அறிவுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறும்.

இப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சையை வடமராட்சி தென்மராட்சி மாணவர்களுக்காகவும் நடத்த முடிவாகியுள்ளது.

அதன் பிரகாரம் தென்மராட்சியில், அமிர்தாம்பிகை வித்தியாசாலையிலும், வடமராட்சியில் வட இந்து மகளிர் கல்லூரியிலும் போட்டிக்கான எழுத்துப் பரீட்சை நடைபெறும் என சைவசமய விவகாரக் குழுவின் தலைவர் [illegible] தெரிவித்தார்.

(அ-30)

## மூளாய் ஆஸ்பத்திரியில் மீண்டும் வைத்திய சேவை

யாழ்ப்பாணம், ஒக் 12

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்க வைத்திய சேவை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் ஆரம்பமாக உள்ளது.

வலிமேற்கு பிரதேச சபைச் செயலாளரும், பிரதிக் கூட்டுறவு ஆணையாளருமான கா. சந்திரராசா வைத்திய சேவையை வைபவ ரீதியாக அன்று முற்பகல் 9 மணிக்கு ஆரம்பித்து வைப்பார்.

கடந்த வருடம் ஜூலை மாதத்தில் நடைபெற்ற ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் போது மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மிக மோசமாகச் சேதப்படுத்தப்பட்டிருந்தது

அதன் சேவை மீண்டும் ஆரம்பமாக உள்ளதால், வலிகாமம் பகுதி மக்கள் பெரிதும் நன்மை அடைவர்.

இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளரிடமிருந்து மருந்துக்குரிய கட்டணம் மட்டுமே அறவிடப்படும் என்றும் —

வைத்திய ஆலோசனைக்கான கட்டணம் அறவிடப்பட மாட்டாது என்றும் —

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கப் பணிப்பாளர் சபை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

(அ)

## ஹமில்டன் மீதான வழக்கு ஜனவரியில் விசாரணை

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி இசட் குணவர்த்தனா முன்னிலையில் விசாரிக்கப்படவிருக்கிறது.

3 - 9 - 93க்கும் 30–9–94க்கும் இடைப்பட்ட காலத்தில் சட்டவிரோதமாக 75 லட்சம் ரூபா சொத்து சேர்த்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டி லஞ்சத் திணைக்களத்தால் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்தவழக்கு மேல் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டே விசாரணை திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அன்று ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

(இ-3)

## வாசகர் திருமுகம்

### மானிப்பாய்க் கடைகளில் விலைப்பட்டியல் இல்லை!

மானிப்பாய்ப் பகுதியில் உள்ள சில தனியார் வர்த்தகர்கள் தமது கடைகளில் விலைப்பட்டியலைப் போடத் தவறியுள்ளனர். சில கடை உரிமையாளர்கள் மண்எண்ணெய் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றுக்கு மட்டுமே விலை போட்டிருக்கிறார்கள்.

கடைகளில் விலைப்பட்டியல் போடாத காரணத்தினால் பொது மக்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகி ஒவ்வொரு கடை, கடையாக ஏறி இறங்க வேண்டி இருக்கிறது. ஒரு கடையில் ஒரு விலையும், மறு கடையில் இன்னொரு விலையுமாகவே பொருள்கள் விற்கப்படுகின்றன.

நாட்டு நிலைமையை சாட்டாக வைத்துக் கொண்டு தங்களுக்கு விரும்பினபடி விலைகளை கூட்டுகிறார்கள்.

கூட்டுறவுச் சங்கங்களில் ஒவ்வொரு பொருள்களுக்கும் விலைப் பட்டியல் போட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

தனியார் கடைகளில் சிலவற்றில் விளம்பரத்திற்காக தங்களின் நிறுவனத்தில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன என்பதனைப் பட்டியல் எழுதிப் போட்டிருக்கிறார்கள். ஆனால் விலை போடப்படுவதில்லை.

அன்றாட பாவனைப் பொருள்களாகிய அரிசி மா, பருப்பு, சீனி, மற்றும் பலசரக்குச் சாமான்கள் ஆகியவற்றுக்காவது விலைப் பட்டியல் போட்டால் பொது மக்கள் நன்மை அடைவர்.

எனவே தனியார் நிறுவனத்தினர் பொது மக்களின் நலன் கருதி இதை நடை முறைக்கு கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து அக்கறை கொண்டு நடவடிக்கை எடுப்பார்களாயின் அவர்கள் பெறும் ஊதியத்துக்குப் பெறுமதியாக இருக்கும்.

செ. கணேசதாசன்

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

### பல்கலைக்கழக பகிடிவதை தலைதூக்காதிருக்க ஒரு வழி

பகிடிவதையைக் கண்டித்துப் பேசுகிறார்கள், எழுதுகின்றார்கள். எல்லோரும் அதனை வெறுப்பதுபோல், எதிர்ப்பது போல் காட்டுகின்றார்கள். பகிடிவதை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும், அவர்கள் தண்டிக்கப்படுவர் என்று எச்சரிக்கின்றார்கள்.

அறை வதை, அம்பல வதை, தெரு வதை எதுவானாலும் யார் வதைப்பவர்? யார் வதைக்கப்படுபவர்? யார் எச்சரிப்பவர்?

புதிய மாணவராகப் பல்கலைக்கழகம் புகுந்தபோது பகிடிவதைக்கு உட்பட்டு அல்லற்பட்டு ஐயோ! முறையோ!! என்று அலறிய அதே மாணவர்களே மூத்த மாணவரானதும், ''யாம் பெற்ற இன்பம் (துன்பம்) எல்லோரும் பெறுக'' என்ற தோரணையில் நாடகத்தை நடத்துகின்றார்கள்.

எச்சரிக்கை விடுபவர்களும் ஒருகால் வதைக்கப்பட்டவரும் வதைத்தவருமே. அதனால்தான் அது எச்சரிக்கையாக இல்லாமல் வெருட்டாகத் தென்படுகின்றது.

பகிடிவதைக்கு ஆளாகி அவதியுறும் மாணவர், தாம் மூத்த மாணவராக வரும்போது அதனை வெறுப்பாரா? செய்யாது விடுவாரா? தாம் பட்ட அவலத்தைச் சிந்திப்பாரா? பகிடிவதை தலைதூக்கா திருக்க இதைவிட வேறு வழியுண்டா? நம்மவர்க்குச் சுடலைஞானம் பிறப்பது வழமைதான், பற்றையைச் சுற்றித்தட்டுவதிலும் நாம் வீரர்தாம்!

பி. கே. பாலசிங்கம்

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட பகுதிக்கான கப்பல் பயணம்; மக்கள் பந்தாடப்படுகின்றனர்!

''வடபகுதிக்கான கப்பல பயணத்தை நாம் மேற்கொள்ள முற்படும்போது பல்வேறு வழிகளிலும் பந்தாடப்படும் நிலையேஏற்படுகின்றது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற நிலையிலேயே செயற்பாடுகள் காணப்படுகின்றன.

''வவுனியாவிலும், திருகோணமலையிலும் மாறி மாறி அகதிமுகாம்களில் நாள்களைக் கழிக்க வேண்டியுள்ளது. திருகோணமலைக்கு வந்ததும் கப்பலில் பயணம் செய்யலாம் என்ற நப்பாசையுடன் இங்கு வந்தாலோ வேதனைதான் மிஞ்சுகிறது'' என வவுனியாவிலிருந்து வந்த பலரும் தெரிவித்தனர்.

''திருகோணமலைக்கு வந்த பின்னர்தான் கப்பல் பயணம் எவ்வளவு சிரமமானது என்பதனை எம்மால் உணர முடிகின்றது — என வேதனையுடன் சொன்னார் 52 வயதான சிறீஸ்கந்தராஜா.

இவர் காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலையின் முன்னாள் கணக்காளர். ''கொழும்பு செல்லவென ஏற்கனவே நான் வவுனியாவுக்கு வந்திருந்தேன். ஆனால் அங்கு செல்ல எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தென்பகுதி தவிர்ந்த வேறு எங்காவது செல்ல விருப்பமா'' என என்னைக் கேட்டார்கள்.

''கொழும்பில்தான் எனது உறவினர்கள் உள்ளனர். நான் வேறு எங்கே செல்வது'' எனக் கூறினேன். அப்படியானால் திரும்பவும் வடபகுதிக்குச் செல்லுமாறு நான் உத்தரவிடப்பட்டேன். இதனைத் தொடர்ந்து நெலுக்குளம் முகாம், கோழிப்பண்ணை முகாம் என்றெல்லாம் சென்று பின்னார் கப்பல் மூலம் திருகோணமலை செல்ல நாம் அனுப்பி வைக்கப்பட்டோம்.

ரயில் மூலம் நாம் திருகோணமலை வரவும் ஏற்பாடு செய்யப்பட்டது, ரயில் பெட்டியில் ஏறிய பின்னர் வழியில் எங்கும் இறங்கக் கூடாது என எமக்குத் தெரிவிக்கப்பட்டது. நாம் வந்த மூன்று ரயில் பெட்டிகளும் வழியில் நாம் எங்கும் இறங்காத வகையில் பூட்டப்பட்டன. மாகோ ரயில் நிலையத்தில் எம்மில் சில புத்திசாலிகள் எவ்விதமோ கதவைத் திறந்து தேநீர் சிற்றுண்டிகளை அருந்தினர். ஏனையோர் பயத்தினால் இறங்கவேயில்லை. ஒருவழியாகத் திருகோணமலையை வந்தடைந்தோம்.

## அகதி முகாம்களில் மாறி மாறித் தங்கி அவர்கள் படும் அவலங்கள் அனந்தம்!!

### திருமலையிலும் முகாமில்

இங்கு வந்தவுடன் மீண்டும் உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலை முகாமுக்கு கொண்டுவரப்பட்டோம். இங்கு இரண்டு வாரங்களாக நாம் தங்கியுள்ளோம். 314 பேர் வரை இங்குள்ளனர்.

இந்த விடயத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினரை நாம் பாராட்ட வேண்டும். பவுசர்கள் மூலம் அவர்கள் நமக்குக் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் தேவையான தண்ணீரைத் தேவையான போதெல்லாம் கொண்டு வந்து தருகின்றனர். இந்த நிறுவனத்தைச் சேர்ந்தவரான ஏப்ரஹாம் அடிக்கடி வந்து நமக்குத் தேவையான உதவிகளைச் செய்து தந்துள்ளார்.

### அடிப்படை வசதிகள் ஒருநாளைக்கு 42 ரூபா

ஆனால் வேதனை என்னவென்றால் வாரக் கணக்கில் நாம் இங்கு தங்க நேரிட்டபோது அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் நம்மில் சிலருக்கு வயிற்றோட்டநோய் ஏற்பட்டது. இங்குள்ள தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஞானகுணாளன். தலைமை சுகாதார பரிசோதகர் கந்தையா ஆகியோர் வந்து எமக்கான மருந்து வகைகளைத் தந்தபோதிலும் உணவுக் குறைபாட்டினாலும் தண்ணீர் அசுத்தமடைந்ததாலும் சிலருக்கு வயிற்றோட்ட நோய் ஏற்பட்டதாக டாக்டர் தெரிவித்தார்.

உணவைப் பொறுத்தவரை தினசரி மரக்கறி உணவே எமக்குத் தரப்படுகின்றது. காலையில் பாணும் சம்பலும். இந்த மரக்கறி உணவைத் தொடர்ந்து உண்டபோதே பலருக்கு உணவு மாற்றம் காரணமாக இந்நிலை ஏற்பட்டது. சாப்பாடு தருபவர்களைக் கேட்டால், ''ஒரு நபருக்கு 42 ரூபாதான் மூன்று வேளைக்கும் தரப்படுகின்றது. இந்தப் பணத்தில் வேறு எந்த விதத்தில் உங்களுக்கு சாப்பாடு போட முடியும்?'' என்று கேட்கிறார்கள்.

''இரண்டு வாரத்திற்கு மேல் இருந்து விட்டு நாளை போகப்போகிறோம் நாளை வருபவர்களுக்கும் இதுதான் கதியாகஇருக்கும். இதையெல்லாம் யாரிடம் சொல்ல முடியும்?'' என்று கூறினார். சிறீஸ்கந்தராஜா.

அவர் கூறிய அந்த வேளையிலேயே வயிற்றுப் போக்குடன் ஒரு நபர் அவஸ்தைப் படுவதை அங்கு காண முடிந்தது. ''பல நூறு மக்கள் தங்கியுள்ள இப்படியான இடத்தில் தண்ணீர் அசுத்தமடையத்தான் செய்யும். எனவே இப்படியான நிலையில் வயிற்றோட்டம் போன்ற நோய்களைத் தடுக்க வேண்டுமானால் குடி தண்ணீரை சுட வைத்துக் குடிக்க வேண்டும். எந்த அரச சார்பற்ற நிறுவனமாவது குடி தண்ணீரைச் சூடாக்குவதற்கான ஒன்றிரண்டு பொயிலரை தந்துதவுமானால் இதற்கு ஓரளவு தீர்வு காண முடியும்'' என்றும் டாக்டர் குணாளன் தெரிவித்தார்.

### கப்பல் பயணம் கஷ்டம்

''வடபகுதிக்குச் செல்லும் போதுதான் இந்த நிலை பென்றால் அங்கிருந்து திரும்பி வரும் போதும் எத்தனை சிரமங்களை நாம் அனுபவிக்க வேண்டியுள்ளது' என வடபகுதியிலிருந்து வந்தோர் தெரிவிக்கின்றனர்.

''கப்பலில் பயணத்தை மேற்கொள்ளும் போது சிறு குழந்தைகள்; அழுதால் கூட எதையும் வாங்கிக் கொடுப்பதற்குக் கூட வழியில்லை. சோடா மட்டுமே சிலவேளைகளில் கப்பலில் இடைக்கிறது. 18 மணித்தியால கப்பல் பயணம் வேதனை நிறைந்ததாகவே உள்ளது.

''கொழும்பிலிருந்து தூர வெளிநாடு செல்லும் ஒருவர் கூட இந்த 18 மணித்தியாலத்தில் அங்கு சென்று விடலாம். நாமோ சோதனையிலும் வேதனையிலும் கடற் பயணத்தினை மேற்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்'' — என கப்பல் பயணம் மேற்கொண்ட ஓர் இளம் பெண் தெரிவித்தார்.

கப்பல் பயணிகளின் நலன் கருதி பிஸ்கட் போன்ற உணவு வகைகளையாவது கப்பலில் சிற்றுண்டி சாலை மூலம் விற்பனவு செய்ய ரச மட்டத்திலும் கப்பல் முகவர் தரப்பிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் அது பயணிகளுக்கு ஆறுதலாக இருக்கும்— எனவும் பயணிகள் பலரும் தெரிவித்தனர்.

நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு தரை வழிப் பயணத்தை இக்கட்டான நிலையில் மேற்கொள்ள முடியாத நிலையில் கடற்பயணத்தைப் பல்வேறு சிரமங்களின் மத்தியில் மேற்கொள்ளும் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் முடிந்த அளவில் உதவிகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும் என்பதே இத்தகையோரின் எதிர்பார்ப்பாகும்.

★

(நன்றி: வீரகேசரி)

# வவுனியா எல்லைக் கிராமங்களில் 20 கிலோ மீற்றர் பாதுகாப்பு வலயம்

## சிங்களக் குடும்பங்களை மீளக் குடியமர்த்த முயற்சி

கொழும்பு, ஒக் 12

புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி வவுனியாப் பகுதியில் இருந்து வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்த சுமார் மூவாயிரம் சிங்களக் குடும்பங்களை மீண்டும் அந்த இடங்களில் குடியமர்த்துவதற்காக 20 கிலோ மீற்றர் பாதுகாப்பு வலயம் ஒன்றை யமைக்க இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் ரோய்ட்டருக்குத் தெரிவித்துள்ளார் என்று ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்த நோக்கத்துக்காக நேற்று வவுனியாவில் இருந்தும் ஹெப்பிட்டிக் கொலவாவில் இருந்தும் வவுனியாவில் உள்ள எல்லைக் கிராமங்களுக்கு படையினர் அனுப்பப் பட்டதாக மேலும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-10)

# 3 பெண்கள் உட்பட 47 பேர் அநுராதபுர நீதிமன்றில்

## 16 ஆம் திகதி ஆஜராவர்

கொழும்பு, ஒக். 12

அவசரகால விதிகளின் 18 ஆவது பிரிவில் சந்தேகத்தின் பேரில் வடபகுதியில் கைதாகி அநுராதபுரம் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 3 பெண்கள் உட்பட 47 தமிழ் கைதிகளையும் எதிர்வரும் 16 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு அநுராதபுரம் நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்,

கடந்த வாரம் இவர்கள் மீதான வழக்கு அநுராதபுரம் நீதிமன்றில் எடுக்கப்பட்ட சமயம், கைதிகள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவில்லை.

இவர்கள் சார்பில்ஆஜரான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி, இவர்கள் கைதாகி 3 மாதங்கள் முடிவடைந்ததால் இவர்களைப் பிணையில் விடவேண்டும் என்று கோரினார்.

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சேனக சில்வா, இவர்கள் விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறவேண்டியிருப்பதாகக் கூறி அவகாசம் கோரினார்.

இதையடுத்து எதிர்வரும் 16 ஆம் திகதி சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(இ-3-ரி)

# விகாரை அறையில் விட்டுச் சென்ற பொருள்

## இளம் பிக்கு அபகரித்தாராம்

கொழும்பு, ஒக். 12

நாரஹேன்பிட்டி விகாரையில் வெடி மருந்துகள், குண்டுகள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த விகாரையில் ஓர் அறையில் தங்கியிருந்த உதவித் தொழில் ஆணையாளர் ஆர். தர்மலிங்கம் என்பவர் கடந்த பெப்ரவரி மாதம் கைதாகியிருந்தார் அல்லவா?

அவர் இப்போது விடுதலை. செய்யப்பட்டுவிட்டார்.

விடுதலையான தர்மலிங்கம் தாம் முன்பு தங்கியிருந்த விகாரையின் விகாராதிபதியுடன் தொடர்பு கொண்டு தமது விடுதலை பற்றி தெரிவித்தாராம்.

பின்னர் விகாராதிபதியிடம் கதையோடு கதையாக தமது அறையில் இருந்த பொருள்களை எடுக்க விரும்புவதாக தர்மலிங்கம் தெரிவித்தாராம்.

விகாராதிபதி தெரிவித்த விடயம் தர்மலிங்கத்தை தூக்கிவாரிப் போட்டது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

உங்கள் மின் விசிறியையும், இதர விலையுயர்ந்த பொருள்களையும் விகாரையில் இருந்த இளம்பிக்கு ஒருவர் எடுத்துக் கொண்டு தலை மறைவாகிவிட்டார் — என்பதே விகாராதிபதியின் பதில் ஆகும்.

(இ-3)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05 – 07 – 1949

உதிர்வு: 24 – 09 – 1995

திருமதி

## மனோன்மணி கிருஷ்ணபிள்ளை

பாசத்தின் ஒலி கேட்கச் சென்ற குல''மணியே!''
- எம்மை விட்டு
பேசாமல் போன தெங்கே?
ஐந்து முத்துக்களை ஈன்று வளர்த்தாயே - இன்று
இடைநடுவில் சென்றதேனோ?
மாயவனின் மனோன்மணியே! - எம்மைப் பிரிந்து
மேல்லோகம் சென்றாயோ நாமறியோம்!!
ஆண்டு ஒன்று ஆனதம்மா! - எம்மனது
ஆனாலும் உன்னையே தேடுதம்மா!!

என்றும் தங்கள் நினைவுடன் வாழும்;

கணவன்: பா. கிருஷ்ணபிள்ளை
பிள்ளைகள்: ப. கிருஷ்ணலோசனா (கனடா),
கி. கிருஷ்ணபாபு (டென்மார்க்),
கி. கிருஷ்ணராஜா (கனடா),
கி. கிருஷ்ணபிரபு, கி. கிருஷ்ணசர்மினி
மருமகன்: நா. பத்மநாதன் (கனடா)
பேரன்: நா. நிரோசன் (கனடா)

நாவலடி,
உடுப்பிட்டி.

(43140)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தரப் பிரதேசத்தில் ஆட்சி நிறுவ பாரதீய ஜனதா அழைக்கப்படலாம்

## தனித்து கூடுதல் ஆசனங்கள்

லக்னோ, ஒக். 12

உத்தர பிரதேச சட்ட சபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. தவித்து கூடுதல் ஆசனங்களை பாரதீய ஜனதாக் கட்சி பெற்றுள்ளது. பாரதீய ஜனதாவும் அதன் கூட்டுக் கட்சியும் மொத்த 425 ஆசனங்களில் 156 ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளன.

தமது கட்சி தனித்து கூடுதல் ஆசனங்களைப் பெற்றிருப்பதால் ஆட்சி அமைக்க தமக்கே முதலில் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வாணி உத்தரபிரதேச ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உத்தரபிரதேச பாரதீய ஜனதாக்கட்சி நேற்று லக்னோவில் கூடி தனது தலைவரைத் தெரிவு செய்ய இருந்தது.

இந்தத் தேர்தலில் இரண்டாவதுகூடுதல் இடம்பிரதமர் தேவகௌடாவின் ஐக்கிய முன்னணிக்கு கிடைத்துள்ளது. இந்த கூட்டணி மொத்தம் 119 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

காங்கிரஸ்—மற்றும் தாழ்த்தப்பட்ட பகுஜன்சமாஜ் கூட்டணி 88 இடங்களைக் கைப்பற்றி உள்ளது.

முழுத்தேர்தல் முடிவுகளும் வெளிவரும் போது 100 ஆசனங்களாவது காங்கிரஸ் கூட்டணிக்கு கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இந்தியாவிலேயே கூடுதல் சனத்தொகை உள்ள மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் இந்து தீவிரவாதக் கட்சியான

## நோபல் பரிசு

ஒஸ்லோ, ஒக் 12

வேதியலுக்கான இவ்வாண்டு நோபல் பரிசு டேவிட் எம் லீ டக்ளஸ், ரீ ஒஸ்ரட், றோபட் சி நிட்சட்சன் என்ற மூன்று அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு வழங்கப் படுகிறது என சுவீடன் நாட்டு அறிவியல் கழகம் அறிவித்தது.

(இ-10)

பெற்றிருந்தார். அவர் கட்டார் தொகுதி உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார். (இ-10)

## ஆயுத விற்பனை உலகில் அதிகரிப்பு

ஜெனிவா, ஒக். 12

உலகில் 1995 ஆம் ஆண்டு ஆயுத வர்த்தகம் 15 சத வீதத்தால் உயர்ந்து 35020 கோடி டொலரை எட்டியுள்ளது என ஐ. ஐ. எஸ். எஸ் என்னும் போர் விற்பனை ஆயுதங்கள் பற்றிய சர்வதேச ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் சவூதி அரேபியா மட்டும் 810 கோடி டொலர்களுக்கு ஆயுதங்களை வாங்கி உள்ளது என்றும் —

இந்தியா, தாய்வான், தென்கொ ய, பாகிஸ்தான், சீனா, வியட்நாம் போன்ற நாடுகள் 730 கோடி டொலருக்கு ஆயுதங்களை வாங்கின எனவும் — அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ- 10)

## தலிபானுக்கு எதிராக 3 படைகள் இணைவு

காபூல், ஒக். 12

ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றி உள்ள தலிபான் ஆட்சியாளர்களுக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி ரபானி, முன்னாள் பிரதமர் ஹெக்மத்தியார், வட ஆப்கானிஸ்தானின் யுத்தப் பிரபுவாகக் கருதப்படும் ஜெனரல் டொஸ்ரம்] ஆகியோர் ஒன்றிணைந்துள்ளனர்.

இந்த மூன்று குழுக்களும் இணைந்ததை அடுத்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சலான் நெடுஞ்சாலையில் நடைபெற்ற சண்டையில் தலிபான் படையினர் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

சுமார் 30 கிலோ மீற்றர் தூரம் தலிபான் படைகள் பின்வாங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலிபானுக்கு எதிரான படைகள் மீண்டும் காபூலை முற்றுகையிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-10)

## உலக அரங்கில்

பாரதீய ஜனதா அறுதிப்பெரு பான்மை பெறமுடியாது போனது ஆளும் ஐக்கிய முன்னணி அரசுக்கு பெரும் வெற்றி என்று பிரதமர் தேவ கௌடா கருதுவதாக வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்கள் தெரிவித்தன.

அதே சமயம் இந்தியாவில் 3 நாடாளுமன்றத் தொகுதிகளில் நேற்று முன் தினம் இடைத் தேர்தல்கள் நடைபெற்றன.

ஆந்திர மாநிலத்திலுள்ள நந்தியால், குஜராத் மாநிலத்திலுள்ள காந்திநகர், ஒரிசா மாநிலத்திலுள்ள கட்டார்ஆகியதொகுதிகளிலேயே நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றன.

சென்ற பொதுத் தேர்தலில் 2 தொகுதிகளில் நரசிம்மராவ் வெற்றி பெற்றார். பின்னர் நந்திலால் தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவர் இராஜினாமா செய்தார்.

இதேபோல் 2 தொகுதிகளில் வெற்றி பெற்ற பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் வாஜ்பே காந்திநகர் தொகுதி உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.

ஒரிசா மாநில முன்னாள் முதலமைச்சர் பிஜூபட்னாயிக் 2 தொகுதிகளில் வெற்றி

## ரஷ்ய அமைச்சர் பதவி நீக்கம்

மொஸ்கோ, ஒக். 12

கொலை முயற்சி ஒன்றில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ரஷ்ய விளையாட்டுத் துறை அமைச்சரையும், டென்னிஸ் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஒருவரையும் ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சின் கடந்த சனிக்கிழமை பதவி நீக்கம் செய்தார். (இ)

## அமெரிக்கர்கள் மரணம்

காட்மண்டு, ஒக். 12

எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முயன்ற இரு அமெரிக்கர்கள் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தனர். (இ)

## பங்களாதேஷில் எய்ட்ஸ் நோய்: 3 பேர் மரணம்

டாக்கா, ஒக். 12

எய்ட்ஸ் நோய் காரணமாக பங்களாதேஷில் மூவர் மரணம் அடைந்தனர்.

ஆசியாவில் மட்டும் 15 இலட்சம் குழந்தைகள் உட்பட [illegible] நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## வடகொரியாவுக்கான உதவிகள் நிறுத்தப்படும்
### தென்கொரிய ஜனாதிபதி தெரிவிப்பு

சோல், ஒக். 12

வடகொரியாவுக்கு வழங்கி வந்த அனைத்து உதவிகளையும் நிறுத்துவது என தென்கொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 19ஆம்திகதி வடகொரியாவைச் சேர்ந்த உளவாளிகள் நீர்மூழ்கி ஒன்றில் தென்கொரியாவுக்குள் இரகசியமாக ஊடுருவமுயன்ற சம்பவம் தொடர்பாக தென்கொரிய ஜனாதிபதி கிம்யுன் சன் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

தனது அரசினால் வடகொரியாவுக்கு வழங்கவிருந்த 30 இலட்சம் டொலர் பெறுமதியான உதவிகளை நிறுத்துவதென அவர் அறிவித்துள்ளார்.

தற்போது உணவு மற்றும் மின்வெட்டால் பாதிக்கப்பட்டுள்ள வடகொரியாவை இந்த முடிவு பெரிதும் பாதிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)


## நெஞ்சில் நீங்கா ஓராண்டு நினைவுக் கருக்கள்



தோற்றம்: 02 — 05 — 1927

மறைவு: 12 — 10 — 1995

அமரர்

**கந்தையா தர்மரத்தினம்**

(இளைப்பாறிய அதிபர்)

அன்பின் இருப்பிடமே; அகிலத்தில்
உங்களைப் போல பண்பில் இனியார் யார்?
எங்கள் குடும்பத்தின் ஜோதியே!
தேவ சித்தத்தால் எங்களைப் பிரிந்தீர்களே!
ஆண்டொன்று ஆகுதையா அணையாது
எம் நெஞ்சங்களில் ஒளிவிடும் தூயவரே!
உங்கள் ஆத்மா கர்த்தருடன் இணைந்திட
இறைஞ்சுகின்றோம்.

எங்கள் குடும்பத்தலைவரின் பிரிவின் போது வருகை தந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர் அனைவருக்கும், செய்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும், யா/ தொல்புரம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்களுக்கும், யாழ்ப்பாணம், இலங்கை வங்கி மேற்தரக்கிளை அங்கத்தவர்களுக்கும், அமெரிக்கமிஷன் அச்சக நடத்துனர், ஊழியர்களுக்கும், வட்டுக்கோட்டை திருச்சபையில் இருந்து சேமக்காலை ஆராதனையில் கலந்து கொண்ட அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலி வழங்கியவர்களுக்கும், காலங்கடந்தாலும் நமது நன்றிகள் பற்பல உரித்தாகுக.

இங்ஙனம்.
என்றும் அன்பகலாத
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

(43122)



## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**S.K. செல்லையா அவர்கள்**

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கிளிநொச்சி)

தோற்றம்: 12—04—1934

மறைவு: 18—09—1990

திதி: **12·10·1996**

அன்பால் அறிவூட்டி
பண்புள்ளம் நாம் பயில
எண்ணங்கள் தந்தெம்மை
இதமாக வாழ வைத்த தந்தையே!

தங்கள் ஆன்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

(சி/3258)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள றொபின் 18 மொடல் நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இ. தளைய சிங்கம், இல. 382, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
(43145)

### தவறிவிட்டது

இல. 433, நாவலர் வீதி, அரியாலை என விலாசமிட்ட இலக்கம் 520852751 V உடைய செல்லத்துரை சண்முகசுந்தரம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். A. சிவரத்தினம், இல. 291, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(பத்திராபதி) (43146)

### புத்தகப்பிரியர்களே

தென்மராட்சியில் பல அரிய நூல்களை இரவல் பெற்று வாசிக்க நாடுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரரி (Ling Lending Library), இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி.
(43084)

### திருமண சேவை

சுவிஸில் வசிக்கும் 28 வயது இந்து, கௌரவமான குடும்பம், பூரட்டாதி நட்சத்திரம், செவ்வாய் தோஷமுண்டு. ஐரோப்பிய நட்டில் வசிக்கும் தமிழ்ப்பெண் விரும்பத்தக்கது. அரச உத்தியோகத்தர்களுக்கு மணப்பெண்கள் தேவை. துர்க்கா திருமண சேவை, நாவலர் - பிறவுண் றோட் சந்தி, யாழ்ப்பாணம்.
(43109)

### (O/L) MATHS

அண்ட சராசர முறையில் ஆரம்ப அறிவு 20 நிமிடங்களில் நிறைவேற்றப்படும். தொடர்ந்து அம்முறையில் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Disctintion பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.
(43085)

## கொக்குவில் இந்து அதிபர்

யாழ்ப்பாணம், ஒக். 12

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராக பொ. கமலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபராக இவர் முன்னர் கடமையாற்றி வந்தார். (இ-3)

## மலேரியா பரவுகிறது

வலி-தென்மேற்கு.ஒக். 12

சங்கானை அரசாங்க வைத்தியசாலையில் — அளவெட்டி, கந்தரோடை பகுதிகளிலிருந்து அதிகளவிலான மலேரியா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சமீப காலமாக மேற்படி பகுதிகளில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.
(இ-145)

## கணித விஞ்ஞான வினா விடைப் போட்டி

வலிகாமம் தெற்கு, ஒக் 12

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கணித - விஞ்ஞான வினாவிடைப் போட்டிகளின் வலய மட்டத்திலான போட்டிகள் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி நடைபெறும் என வலயம் இரண்டின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வீ. இராசையா அறிவித்துள்ளார். (இ-152)

---

மானிப்பாய் கோவில்பற்று
பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்
சங்க அங்கத்தவர்களுக்கான

## அறிவித்தல்

**30 - 09 - 1996** வரை ரூபா 100/- பங்குப்பணம் செலுத்திய அங்கத்தவர்களின் பெயர் விவரமடங்கிய பட்டியல்கள் கிளைநிலையங்களிலும், தலைமைக்காரியாலயத்திலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதுவரை திறக்கப்பட்டு செயல்படாத கிளைநிலையங்களின் பட்டியல்கள் கீழ்க்குறிப்பிடப்படும் கிளைநிலையங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| கிளை இல. **03** | — | கிளை இல. **04** | இல் |
| கிளை இல. **07** | — | கிளை இல. **32** | இல் |
| கிளை இல. **09** | — | கிளை இல. **08** | இல் |
| கிளை இல. **14,24** | — | கிளை இல. **15** | இல் |

சங்க வேலை நாள்களில் இதனைப் பார்வையிடலாம். மேன்முறையீடுகள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் **20 - 10 - 1996** இற்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் பொது முகாமையாளர்
(சி/3266)

---

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## வருடாந்த பொதுக் கூட்டம்

காலம்: **19 - 10 - 1996** சனிக்கிழமை
மு. ப. **9** மணி (பழைய நேரம்)
இடம்: பாடசாலை மண்டபம்.

மேற்படி கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர் தெரிவு இடம்பெற இருப்பதால் பெற்றோர்கள், ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

க. தேவராஜா
பொதுச் செயலர்

பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக் கூட்டம்

மேற்படி சங்க பொதுக்கூட்டமானது எதிர்வரும் **1996 - 10 - 19** ஆம் திகதி சனிக்கிழமை பழைய நேரம் மு. ப. 11 மணிக்கு நடைபெறும். தற்போது பாடசாலை செல்லும் பழைய மாணவர் தவிர்ந்த ஏனையோரை தவறாது சமுகம் தருமபடி கேட்டுக் கொள்கிறேன்.

க. தர்மகுலசிங்கம்
பொதுச் செயலர்

யா/புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலயம், யாழ்ப்பாணம். (43147)

---

இறைவனடி இணைந்த

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 04 — 06 — 1919



உதிர்வு: 12 — 09 — 1996

## மேரிமாகிறேற் அந்தோனிப்பிள்ளை

(முத்தம்மா)

எமது பாசம் மிகு அன்னையே!
கல்லறையில் உடலை வைத்து
கண்ணீரால் அதை நிறைத்து
கையாலே மண் இட்டு நினைவினிலே
உந்தனை மறக்கும் நாள் என்றோ அம்மா!

உம் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல: 15,
சந்தான மாதா கோவிலடி,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம். (43112)

---

உ
சாவகச்சேரி
அருள்மிகு

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## நவராத்திரி விழாவும் கேதார கௌரிவிரதமும்

அன்புடையீர்!

எதிர்வரும் 13-10-96 ஞாயிற்றுக்கிழமை புரட்டாதி 28-ம் திகதி நவராத்திரிவிழா ஆரம்பித்து 9 நாள்கள் நடைபெறும். ஆரம்பதினத்தன்று பிரதமையில் காலை கும்பஸ்தாபனமும், தினசரி பி. பகல் 3 மணிக்கு நவராத்திரி பூஜையும் நடைபெறும்.

21-10-96 திங்கட்கிழமை விஜயதசமி அன்று கேதாரகௌரிவிரத பூஜை ஆரம்பிக்கும். கேதார கௌரிவிரதம் அனுட்டிப்பவர் தாமதியாது தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.

அனைவரும் வருக அன்னை அருள் பெறுக.

நன்றி

இங்ஙனம்
ப. மகாகணபதிசர்மா
(43007) ஆதீன தர்மகர்த்தா

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 17 — 06 — 1959



மறைவு: 12 — 09 — 1996

## அமரர் வேலுப்பிள்ளை ரங்கநாதன்

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

பிரிவால் துயருறும்:
திருமதி ரங்கநாதன் பத்மலோஜினி
(மனைவி)
திருமதி வேலுப்பிள்ளை அன்னபூரணம்
(தாய்)
திரு. திருமதி S. K. சுப்பிரமணியம் - பத்மாவதி
(மாமன், மாமி)
சகோதரர்கள், மைத்துனர், மைத்துனிமார்.

இல. 20, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.. (43144)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 1978 — 08 — 06



உதிர்வு: 1996 — 09 — 13

## செல்வி பிறேடா தமயந்தி

(யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்
ஆங்கிலப் பாடசாலை)

உன் இளமையை நோய் வந்து தின்றதா?
நம்ப முடியவில்லை.
மலர வேண்டிய மொட்டே!
மலராமல் போனாயோ?
புன்னகை ஓயாத உன் முகம்
எங்கள் நெஞ்சை விட்டு
ஒரு நொடியேனும் மறையவில்லையம்மா!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
தொலைதூரம் பிரிந்து சென்றாயோ?
உன் ஆன்ம சாந்திக்காக இறைவனைக்
கண்ணீருடன் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துடிக்கும்:
அப்பா, அம்மா, சகோதரன்,
சகோதரிகள், மைத்துனர்,
உற்றார், உறவினர்கள்.

இல; 17/2 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (43149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் சேவை நிலையம்

உதயன்

## அடிக்கடி தழுவுப் தொல்லை

ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்வதை அந்த நாட்டு அரசு பலாத்காரமாகத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக தமிழ் அரசியல் கட்சிகள் கண்டித்துள்ளன.

இதனை நிறுத்தி, இந்தியா தார்மீகக் கடமை உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்படும் வரை — சமாதானம் ஏற்படும் வரை — அகதிகள் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. எனவே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்திலேயே இந்தியா கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு இம்மாதஇறுதியில் கொழும்புவரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரஜித் குஜ்ராலிடம் தமிழ்க் கட்சிகள் வற்புறுத்தவுள்ளன.

இலங்கையின் வடபகுதிக்கு மிகச் சமீபமாக உள்ளது தமிழகமே. சரியாகச் சொல்வதானால், கொழும்பைவிட தமிழ் நாட்டுக்கரை பத்தில் ஒரு பங்குக்கும் குறைந்த தூரம்.

எனவே, போர் நடவடிக்கைகளால் தமது உயிருக்கு ஆபத்து வரும் சூழ்நிலை உருவானதும், தங்கள் நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருள்கள் கிடைக்காத கஷ்டநிலை தோன்றியதும், உறைவிடம் இல்லாததாலும் சுகாதாரக் காரணிகளாலும் தாம் நோய் வாய்ப்பட நேரிடும்என்று அஞ்சும் சூழ்நிலையிலும், மக்கள் தமது உயிரைக் காப்பாற்றுவதற்காக, போர் அச்சம் இல்லாத, அமைதியான அருகில் உள்ள பகுதிக்கு இடம் பெயர்வது இயல்பே; இயற்கையே.

அந்த இயல்பில் வடபகுதித் தமிழர்கள் தமிழகத்துக்கு— இந்தியாவுக்கு — அகதிகளாக இடம் பெயர்வதை பலாத்காரமாகத் தடுப்பது மனிதநேயமில்லாத கல்நெஞ்ச நடவடிக்கை.

தமிழகத்துக்கு, இலங்கையின் வடபகுதித் தமிழர்கள் அகதிகளாகச் செல்வது, மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் பலவித செலவினங்களையும், வேறு அரசியல், சமூகப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும் என்று அந்தத் தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால் உயிர்காக்கும் நோக்குடன் அடைக்கலம், தஞ்சம் கோரும் ஒருவனைப் பலாத்காரமாகத் தடுப்பது அவனைக் கொலை செய்வதற்குச் சமனாகும்.

தவித்த ஈழத் தமிழனுக்குத் தஞ்சம் அளிப்பது தனக்குக் கஷ்டம் என்று கருதும் இந்தியா, அவன் தனது நாட்டுக்குச் செல்வதற்கு காரணமாக உள்ள புறநிலைச் சூழலை மாற்றுவதற்கு முயல வேண்டும். அது குறித்து இலங்கை அரசுடன் உத்தியோகபூர்வ ரீதியில் பேசலாம்.

மூந்திய கசப்பான அனுபவம் வேண்டாம் என்று கருதி இந்தியா ஒதுங்கிக் கொள்ள நினைத்தால்,—

மனிதாபிமான அடிப்படையில் தமிழ் அகதிகளுக்குத் தஞ்சம் அளிப்பது தனது தவிர்க்க முடியாத தார்மீகக் கடமை என்று கருதி அவர்களை ஏற்றுக் கொள்வதே அதன் நற்பெயருக்கு நல்லது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்று காணப்படும் வரை, அவர்கள் தரப்பில் இருந்து இந்தியாவை அகதித் தொல்லை அடிக்கடி தழுவிக் கொள்ளும்.

---

## திருகோணமலைச் சம்பவம்:

# எம்.பிக்கள் தங்கியிருந்த வீட்டை பொலீஸ் சோதனையிட முடியுமா?

### நாடாளுமன்றில் சிறப்புரிமை மீறல் பிரச்சினை

திருகோணமலையில் தமிழ் எம். பிக்கள் தங்கியிருந்த வீட்டை, நாடாளுமன்ற சபாநாயகரின் முன் அனுமதியைப் பெறாமல் நேற்று முன்தினம் திடீரென பொலிஸார் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தியதையும் —

அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையும்—

ஆட்சேபித்து நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றை எழுப்புவது குறித்து ஈ. பி. டி. பி. கட்சியும் புளொட்டும் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்றம் இனி அடுத்த மாதமே கூட இருக்கிறது.

ஈ. பி. டி. பியின் யாழ் மாவட்ட எம். பிக்களான எம். சந்திரகுமார், தங்கவடிவேல் ஆகியோர் திருகோணமலை மத்திய வீதியில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகக் கட்டடத்தில் தங்கியிருந்த போதே அதனை பொலீஸார் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தியதாககூறப்படுகின்றது.

திருகோணமலைச் சம்பவங்கள் குறித்து எமதுதிருகோணமலைச் செய்தியாளர் நேற்று தெரிவித்ததாவது:

திருகோணமலை நகரத்தில் கனகம்மில் பகுதியில் பொலீஸ் உப நிலையம் ஒன்று உள்ளது. அதற்குப் பொறுப்பான அதிகாரியான நவரட்ண பண்டார (வயது 30) கடந்த செவ்வாயன்று அந்த உப நிலையத்துக்கு சற்றுத் தொலைவில் மாணிக்கவாசகர் வீதி, பேச்சியம்மன் கோயிலடிப் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதன் பின்னர் நேற்று முன்தினம் காலையில் திருகோணமலை நகரில் தங்கியுள்ள ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெறுமாறு கோரி நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் நகரின் மத்திய சந்தைப் பகுதியிலிருந்து ஊர்வலம் ஒன்றை நடத்தமுற்பட்டனர். ஆனால் பொலீஸார் அதில் தலையிட்டு ஊர்வலத்தை இடையிலேயே தடுத்து விட்டனர்.

அதன் பின்னர் நகரின் மற்றொரு பக்கத்தில் உள்ள காக்காப்பள்ளி பொலீஸ் சோதனைச் சாவடியில் வைத்து சைக்கிளில் வந்த இருவரை பொலீஸார் மறித்ததாகவும்—

அவர்கள் பொலீஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு மத்திய வீதிப் பக்கமாக மறைந்ததாகவும் பொலீஸ் தரப்பில் கூறப்பட்டது.

அவர்களைக் கலைத்துக் கொண்டு வந்த பொலீஸார் அவர்கள் மத்திய வீதியில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்துக்குள் புகுந்ததாகச் சந்தேகித்து அதனைச் சுற்றி வளைத்துத் தேடியதாகவும்—

அச்சமயம் வீதியில் கூடி நின்ற மக்களைக் கலைப்பதற்காகப் பொலீஸார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டதாகவும்—

பொலீஸ் தரப்பில் மேலும் கூறப்பட்டது. (உ-150)

---

# அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் ஒற்றையாட்சியின் கீழ் சாத்தியமில்லை

### தெரிவுக்குழுக் கூட்டத்தில் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

ஒற்றையாட்சி அமைப்பு வரையறைக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலை ஒருபோதும் செய்யமுடியாது.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அரசமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெரிவுக்குழு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூடிய போது அதன் தலைவரான பீரிஸ் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான ஏற்பாடுகள் நகல் வரைபு ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அதில் இலங்கை ஒற்றையாட்சி அமைப்பினைக் கொண்டது என்ற ஏற்பாட்டுக்குப் பதிலாக ஐக்கியமும் இறைமையும் கொண்ட குடியரசாகும் என்பதுடன் கலைக்கப்பட முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக அது இருக்கும் என்று அதன் முன்னுரையினில் முதல் பந்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அரசமைப்பு வரைபு ஏற்பாடுகள் குறித்து பீரிஸ் உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தார்.

அவ்வேளையில், ஒற்றையாட்சி அமைப்பு என்ற அம்சம் இந்த வரைபில் இல்லை என்பதை காரணம் காட்டி பிரதான எதிர்க் கட்சியான ஐ. தே. க. உறுப்பினர்களும், அரசின் ஓர் அங்கமான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களும் கேள்வி எழுப்பினர்.

இவர்களின் கருத்துக்களுக்குப் பதில் அளித்த போதே ஐக்கிய இலங்கைக்குள் இன நெருக்கடிக்கு அதிகாரப்பரவலாக்கல் மூலம் தீர்வு காண்பதென்ற அரசின் நிலைப்பாட்டில் எந்த வித மாற்றமும் இல்லை என்றும்—

ஒற்றையாட்சி அமைப்பு வரையறைக்குள் அர்த்த புஷ்டியான அதிகாரப்பரவலாக்கலை ஒரு போதும் செய்ய முடியாது என்றும் பீரிஸ் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ் தொண்டமான், ஐ தே.கவின் சார்பில் எம். பிக்களான ஏ. சி. எஸ் ஹமீத், டிரோன் பெர்ணாண்டோ, கே. என். சொக்ஷி, தமிழர்விடுதலைக் கூட்டணி எம். பி நீலன் திருச்செல்வம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் சித்தார்த்தன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (இ-3)

---

# முன்னாள் ஜனாதிபதிடி.பி. சுங்கச் சட்டத்தை மீறினார்

### ஆணைக்குழு முன் தகவல்

கொழும்பு, ஒக். 12

முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க நிதியமைச்சர் என்ற ரீதியில் சுங்கச் சட்டத்தில் சில விதிகளை மீறியுள்ளார் என்பதும்—

இந்த நடவடிக்கையினால் அரசாங்கத்துக்குப் பெரும் வருமானஇழப்பு ஏற்படுவதை கருத்தில் கொள்ளவில்லை என்பதும் — தெரியவந்துள்ளது.

சுங்கப் பகுதியினர் தடுத்து வைத்திருந்த சில பொருள்களை சுங்கச் சட்டங்களையும் மீறி விடுவித்ததன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது என்று திறைசேரியின் முன்னாள் பிரதிச் செயலாளர் கே. சண்முகலிங்கம் தெரிவித்தார்.

அரசாங்கத்துறை நிறுவனங்களில் ஏற்பட்ட ஊழல்கள், ஒழுங்கீனங்கள் ஆகியவற்றை விசாரிக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கும் போது கே. சண்முகலிங்கம் இதனைத் தெரிவித்தார் (இ-3)

---

# வடக்கு அரச அதிபர்களுடன் பாலபட்டபெண்டி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

வடமாகாணத்தில் நிலவும் நிலைமை குறித்து ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி வடக்கு அரச அதிபர்களுடன் கடந்த புதனகிழமை பேச்சுக்கள் நடத்தினார்.

ஜனாதிபதியுடன் வடக்கு அரச அதிபர்கள் சந்திக்க ஏற்பாடாகியிருந்ததாயினும் —

பின்னர் ஜனாதிபதியின் செயலாளர் இந்தச் சந்திப்பை நடத்தினார்.

ஜனாதிபதியின் செயலகத்தில் நடந்த சந்திப்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா அரச அதிபர்களும்—

பாதுகாப்பு அமைச்சு பிரதி செயலாளர் பந்துசேன, மேலதிக அத்தியாவசிய ஆணையாளர் நாயகம் எம். ஐ. எம் ரபீக், வடக்கு மீள் குடியேற்ற அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதீர ஆகியோரும் — கலந்து கொண்டனர்.

அண்மைய இராணுவ நடவடிக்கையின் பின்னர் இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக அரச அதிபர்கள் சமர்ப்பித்த புள்ளி விவரங்களில் முரண்பாடு இருப்பது இந்த சந்திப்பின் போது சுட்டிக் காட்டப்பட்டது.

இதனை அடுத்து அவற்றை சரி செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இக் குழுவுக்கு திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் சி. மானியத்த, அத்தியாவசிய ஆணையாளர் நாயகம் எம் ஐ எம் ரபீக், யாழ் அரச அதிபர் செ. பத்மநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இக் குழுவின் அறிக்கை ஒரு மாத காலத்தில் சமர்ப்பிக்கப் பட வேண்டும் என்றும்—

அதன் பின்னர் வன்னியில் இதுவரை நிவாரணம் பெறாதவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்றும்— இக் கூட்டத்தில் முடிவாகியது. (இ-3-150)

---

**நாளை**

புரட்டாதி 27
ஞாயிற்றுக்கிழமை
திதி: பிரதமை
முன்னிரவு 8. 12 வரை.
நட்சத்திரம்: சித்திரை
பிற்பகல் 5. 05 வரை.
நவராத்திரி விரதாரம்பம்
ராகுகாலம்: 4.32—6 02
சுபநேரம்: 9.02—10.32
([illegible] நேரப்படி)

---

## பெருமாள் கோயிலில்

கொழும்புத்துறை, ஒக். 12

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராசப் பெருமாள் ஆலயத்தில் புரட்டாதிக் கடைசிச் சனியை ஒட்டி இன்று விசேட பூசை, திருவிழா நடைபெறும்.

இன்று அடியார்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் இந்து இளைஞர் பேரவையினரின் தொண்டர் சேவை இடம்பெறும்.

தொண்டர் சேவையில் இணைய விரும்பும் இந்து இளைஞர் மன்றங்கள், மற்றும் பாடசாலை இந்து மன்றங்களின் பிரதிநிதிகள் தங்கள் பெயர்களை ஆலயத்தில் உள்ள பேரவை அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-30)

## லங்கா சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக். 12

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் ஜூன், ஜூலை ஓகஸ்ட் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் யாழ். வர்த்தக வங்கியில் வைத்து எதிர்வரும் 14 ஆம், 15ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 12 மணி வரை வழங்கப்படும் என அந்நிறுவன கணக்காளர் தெரிவித்தார். (இ-3)

## கை மாறிய சைக்கிள் தபாலகத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு முன்பாக நேற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று கை மாறி எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும்—

அந்த சைக்கிள் தற்சமயம் யாழ். பிரதம தபாலகத்தில் உள்ளதாகவும்—

உரியவர் அடையாளம் காட்டி அச்சைக்கிளைப் பெறுமாறும்— யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மகாபோதியைப் பாதுகாக்க விசேட தொண்டர் படை

## இராணுவம் திரட்டுகிறது

அநுராதபுரம் நகரையும் அங்குள்ள மகாபோதிவிகாரையையும் பாதுகாக்கும் நோக்குடன் விசேட இராணுவத் தொண்டர் படை ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்திருக்கின்றது.

இது தொடர்பான அறிவிப்பை இராணுவத் தொண்டர் படை அலுவலகம் விடுத்துள்ளது.

இத்தொண்டர் படையில் சேருவோருக்கு இலவச உணவு, சீருடை மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கப்படும். மாதச்சம்பளமாக ஆறாயிரம் ரூபா கொடுக்கப்படும். அவர்களுக்கு ஓய்வூதியமும் அளிக்கப்படும்.

பதினெட்டு முதல் முப்பது வயதுக்குட்பட்ட, ஐந்தாம் வகுப்பு வரை படித்த அனைவரும் இப்படையில் சேர விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

மகாபோதி விகாரையைச் சூழ இரும்புக்கிராதி அமைக்க ஐம்பது லட்சம் ரூபாவையும் —

விகாரையில் 'மெட்டல் டிடெக்ட்' வசதியை ஏற்படுத்திக் கொடுக்க ஐந்து லட்சம் ரூபாவையும் அரசு வழங்கியுள்ளது.

### போலியோ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்று சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

சில பிள்ளைகளுக்கு முன்னரும் இந்த தடுப்பு மருந்து வழங்கப்பட்டாலும் கூட அவர்களையும் இந்த தடுப்பு மருந்தினை பெற்றுக்கொள்ள பெற்றோர் அழைத்துவர வேண்டுமென்று சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கின்றது. (இ-4)

# டீசல் வாகனத்தை 18 ஆம் திகதிக்குள் பதிவு செய்து கொள்ளக் கோரிக்கை

யாழ். செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில், இதுவரை தற்காலிக பதிவுக்கு உட்படுத்தப்படாத — யாழ். குடாநாட்டில் பாவனையில் உள்ள — சகல டீசல் வாகன உரிமையாளர்களும் தங்கள் பொறுப்பில், பாவனையில் உள்ள டீசல் வாகனங்களை இம்மாதம் 18ஆம் திகதிக்கு முன் யாழ். செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்காலிக பதிவுக்கு உட்படுத்தப்படாத சகல டீசல் வாகனங்களும் இம்மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னர் பாவனையில் ஈடுபடுத்தப்படுவது தடைசெய்யப்படுவதாகவும் —

அத்துடன் டீசலில் இயங்கும் சகல வாகனங்களும் மண்எண்ணெயில் இயங்குவது தடைசெய்யப்படுவதாகவும் —

டீசலில் மட்டுமே இயங்குவதற்கு அனுமதிக்கப்படும் எனவும் — அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## களைநாசனி தட்டுப்பாடு

வலி. தென்: மேற்கு ஒக். 12

நெல் விதைப்புடன் விசிறப்படும் களைநாசனியான கோல், கமநல சேவை நிலையங்களில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நெற்பயிர் முளைக்கும் போதே வேறு களைகள் முளைப்பதைத் தடுப்பதற்கென உபயோகிக்கப்படும் கோல் களைநாசனி கமநல சேவை நிலையங்களில் அறவே இல்லை.

இதனால் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

பல இடங்களில் நெல் விதைப்பு முடிந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-145)

## நவீல்ட் மாணவருக்கு அன்பளிப்பு

தென்மராட்சி, ஒக். 12

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலையைச் சேர்ந்த பத்து மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகளையும், ஒரு மாணவருக்கு மூக்குக் கண்ணாடியையும் வழங்கவுள்ளனர். (இ-117)

## பாப்பரசர் குணமடைகிறார்

வத்திக்கான், ஒக். 12

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் சத்திர சிகிச்சையின் பின்னர் தற்போது தேறிவருகிறார்.

## இந்திய அணி வலுவான நிலையில்

புதுடில்லி, ஒக். 12

இந்தியா — ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையே நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2 ஆவது நாளான நேற்று ஆட்டநேர முடிவில் இந்தியா 6 விக்கெட் நஷ்டத்துக்கு 319 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்திய அணியின் விக்கெட் கீப்பரான நயின் மொங்கியா தொடக்க ஆட்டக்காரராகச் சென்று ஆட்டமிழக்காது 137 ஓட்டங்களைப் பெற்றது நேற்றைய ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இந்திய அணிக்காக விக்ரம் ராவுத் 5, கங்கூலி 66, டெண்டுல்கார் 10, அசாருதீன் 17, ராஹுல்ட்ராவிட் 40, சுனில் ஜோசி 23 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸில் 182 ஓட்டங்களைப் பெற்றது. (இ-10)

# ஆங்கிலம் தெரியாத ஆங்கில ஆசிரியர்

## முந்திய நியமனம் குறித்து பத்திரன

கொழும்பு, ஒக். 12

கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் பலருக்கு ஆங்கிலம் கற்பிக்கவோ அல்லது ஆங்கிலத்தை சரியாக கற்பிக்கவோ பேசவோ தெரியவில்லை நடன ஆசிரியராக நியமிக்கப்பட்ட பலருக்கு நடனத்தைப் பற்றி ஒன்றும் தெரியாமல் இருந்தது இதற்கெல்லாம் முடிவு கட்டவே தெளிந்த ஒரு கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

இப்படிக் கூறினார் கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன.

சிலாபத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை கடுமையாக நிலவி வருகின்றது மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சென்ற சமயம் அங்கு பல பாடசாலைகளில் ஓர் ஆசிரியரே கடமையாற்றுகிறார்.

இன்று 9 ஆயிரத்து 800 தமிழாசிரியர்களே பணிபுரிகின்றனர். ஆனால் சிங்கள மொழியில் 14 ஆயிரம் ஆசிரியர்கள் மேலதிகமாக சேவையில் உள்ளனர்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி நந்தினி தியாகராஜா அவர்களின் சகோதரனும் எமது பாடசாலையின் பழைய மாணவனுமாகிய

**இராஜதுரை ஜெயசிவானந்தன்**

(சித்த வைத்தியத்துறை மாணவன்)

**09-10-96** அன்று அகால மரணமானார்.

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரிய கழகம்,
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

(43154)

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி பரமு

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி பரமு கொழும்பில் வெள்ளிக்கிழமை 11-10-96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா பரமுவின் அன்பு மனைவியும், மகேந்திரன் [U K], ருக்மணி [கொழும்பு], பத்மாவதி [யாழ்ப்பாணம்], விமலச்சந்திரன் [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரா [U K], ஆ. அரசரெட்ணம் [கொழும்பு], Dr S. இராசரெட்ணம் [Dental Surgeon, யாழ்ப்பாணம்], Anne [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமியாரும், சாரதா – சம்பந்தன், காலஞ்சென்றவர்களான அ.ச. மகாதேவா, தர்மா, மகானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr. றஜனி [U K], ஜெனனி [U K], ரவீந்திரன், சிவகாமசுந்தரி [கனடா], அனுசியா, கருணாநிதி [U.K], வாசுகி, பிரபாகரன் [U.K], மீரா, ரவீந்திரா [கொழும்பு], கிருஷன் [U.K], நிவேதித்தா [கனடா], ஜொனாத்தன் [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரணவன், பவித்திரா, சரவணன், கோகுலன், கஜேந்திரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [12-10-96] கொழும்பில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நன்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:-
Dr.S. இராஜரெட்ணம்
[Dental Surgeon]

No 19 [100] 3 ஆம், குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [43155]

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

### வழமை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

கடந்த செவ்வாயன்று பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர், அன்றிரவு நகர வீதிகளில் வைத்து தமிழர்கள் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதை அடுத்து நகரில் பதற்றம் உருவாகி இருந்தது. (உ- 150)

### கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குள் கொழும்பில் பாதுகாப்பைப் பொறுப்பேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

யுத்த முனைக்கு

அவர்கள் அதனைப் பொறுப்பேற்றதும், தற்போது கொழும்பின் பாதுகாப்புக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பொலீஸாரும் ஏனைய படையினரும் யுத்த முனைகளுக்கு அனுப்பப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. உ-150)

### ஜெயலலிதா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாம் கைது செய்யப்படுவதானால் அதுபற்றி தமக்கு பத்து நாள்கள் முன்னதாகவே தெரிவிக்கும் படி உத்தரவிட வேண்டும் என்ற அவரது கோரிக்கையையும் நீதிபதி நிராகரித்தார்.

ஒட்டுமொத்த முன்பிணை அனுமதி வழங்குவதும், முன்கூட்டியே அறிவிப்பதும் புலன் விசாரணைகளைப் பாதிக்கும் என நீதிபதி தெரிவித்தார்.

இதேசமயம் —

கொடைக்கானலில் ஹோட்டல் ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட விடயத்தில் ஊழல் இடம் பெற்றதாகத் தெரிவித்து ஜெயலலிதாவுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக முன்பிணை அனுமதி கோரி அவர் தாக்கல் செய்த மனுவையும் சென்னை மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து, அது தொடர்பான தடை உத்தரவு எதனையும் பெறுவதற்கு ஜெயலலிதா தவறினால் —

கொடைக்கானல் ஹோட்டல் கட்டுவது தொடர்பான ஊழல் வழக்கில் அவர் அனேகமாக கைது செய்யப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவே கருதப்படுகின்றது. (உ-10)

முந்திக்கொள்ளுங்கள்; பி.ப. 4 மணிக்கு முன்பதாக!

உங்கள் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து இன்று கொடுக்கப்படுகிறது

அவர்களுடன் விசேட நிலையங்களுக்கு விரையுங்கள்.

PolioPlus

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2, இலக்கத்திலுள்ள அவ்வலுவலக பணிமனையில் 12 - 10 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org